## CONGRATULATIONS

On Your 9th Anniversary of Episcopal Ordination
(29.09.2002)



Your Excellency!
May the spirit of God guide you,
enlighten you, strengthen you in
your service of God's people!

May God give you good health,
joy and peace!



*We Wish You a Very Happy*
*Episcopal Ordination Anniversary!*

Edited by: Rev. Fr. N. Louis Rayar, Chancellor
Bishop's House, Chingleput.

# DIOCESE OF CHINGLEPUT

## NEWS LETTER







website:www.chengaidiocese.org
Email : chengaidiocese@yahoo.co.in
Ph : 27426649
Fax : 27431784

Vol. 09 No.09 September 2011



கடவுளுடைய
வார்த்தை
உயிருள்ளது,
ஆற்றல் வாய்ந்தது;
இருபக்கமும்
வெட்டக்கூடிய எந்த
வாளினும்
கூர்மையானது;

ஆன்மாவையும்,
ஆவியையும் பிரிக்கும்
அளவுக்குக் குத்தி
ஊடுருவுகிறது; எலும்பு
மூட்டையும்
மச்சையையும்
அவ்வாறே
ஊடுருவுகிறது;
உள்ளத்தின்
சிந்தனைகளையும்
நோக்கங்களையும்
சீர்தூக்கிப் பார்க்கிறது.

எபிரேயர் 4:12



## MONTHLY RECOLLECTION

| Date | Vicariate | Place |
|---|---|---|
| 07.09.11 | Our Lady of Mount Carmel (Covelong) | Thirukazhukundram |
| 07.09.11 | Our Lady of Rosary of Fatima (Tambaram) | Mahalakshmi Nagar |
| 10.09.11 | St. Antony (Palavakkam) | Pallikaranai |
| 14.09.11 | Immaculate Heart of Mary (Kancheepuram) | Sriperumbudur |
| 14.09.11 | St. Francis Xavier (Pallavaram) | Kamarajapuram |
| 14.09.11 | St. John De Britto (Palliagaram) | Ongur |
| 21.09.11 | Our Lady of Good Voyage (Cheyyur) | Porur - Nugumbal |
| 21.09.11 | Mazhai Malai Madha (Madurantagam) | Acharapakkam |
| 21.09.11 | St. Thomas (St. Thomas Mount) | St. Thomas Mount |
| 28.09.11 | St. Joseph (Chingleput) | Chingleput |

## OFFICIAL NOTIFICATION

| | |
|---|---|
| 08.09.11 | Nativity of B.V. M<br>**HOLIDAY FOR THE CURIA** |
| 14.09.11 | Exaltation of the Holy Cross - Feast |
| 29.09.11 | **9th Anniversary of our Bishop's Consecration and the Inception of Our Diocese.**<br>Feast of HOLY ARCH ANGELS MICHAEL, RAPHAEL & GABRIEL.<br>**HOLIDAY FOR THE CURIA** |
| 01.10.11 | St. Theresa of Child Jesus - Feast |
| 01.10.11 | Mazhai Malai Madha Feast - Secondary Patroness of our Diocese |

## OBITUARY

**Mr. Ambrose**, the father of **Rev. Fr. A. Gnanamuthu** passed away on 20th August, 2011May God grant his eternal rest. Our heartful condolence to the bereaved family members.

# FROM THE PROCURATOR'S DESK

## SURPLUS MASSES

**August 2011**

| | |
|---|---|
| Parish Priest, Chingleput | 8,650.00 |
| Parish Priest, Thatchoor | 1,250.00 |
| Parish Priest, Palavakkam | 15,400.00 |

## SEMINARIANS' FUND

**August 2011**

| | |
|---|---|
| Mr. S. M. Lourdu Samy, Madurantagam | 600.00 |
| Mr. M.S. Abraham, Chennai | 100.00 |
| Mr. C. Arockiadoss, Poonamallee | 6,000.00 |
| Mr. Mathias, Kancheepuram | 5,000.00 |
| Mrs. Rita Josephine, Chingleput | 1,500.00 |
| Mrs. Violet Jacob, Chingleput | 1,000.00 |
| Mr. Peter and Family, Chingleput | 2,000.00 |
| Mrs. Roselin Samvendan, Tambaram | 1,000.00 |
| Mrs. Laila Joseph, Tambaram | 3,000.00 |
| Mrs. Kanikai Mary Victor, Tambaram | 500.00 |
| Parish Priest, Sholinganallur | 1,000.00 |
| Mr. Edwin Regis, Chennai | 1,500.00 |

## BISHOP NEETHINATHAN'S EDUCATION FUND

**August 2011**

| | |
|---|---|
| Mr. Antony Francis | 400.00 |
| Sr. Rexline, St. Thomas Hospital, St. Thomas Mount | 25,000.00 |
| Sr. Headmistress, St. Joseph's Mat Hr Sec School, Maraimalai Nagar | 25,000.00 |
| Youth Association, Perungudi | 3,100.00 |
| St. Vincent De Paul Society, Perungudi | 5,000.00 |
| Parish Priest, Perungudi | 50,000.00 |

**Rev. Fr. P. Charles**
**Procurator**

# From Vicar General's Desk...

**September 2011**

***Dear Fathers/Brothers/Sisters,***

The celebration of Bible Month, Week and Sunday is around. We are called to re-commit ourselves to read and live the Bible in our Christian life. This year, in a very particular way, we give emphasis to the reading and interpretation of Bible in the context of ***Year of Catechesis***.

At this juncture, may I draw your kind attention to the Post-Synodal Apostolic Exhortation ***Verbum Domini*** of our Holy Father *Benedict XVI*. This document is the result of the Synod of Bishops. Apart from introduction and conclusion this document has three parts: *Verbum Dei* (Word of God), *Verbum in Ecclesia* (Word in the Church), and *Verbum Mundo* (Word to the World). The first part is mostly dealing with the theology of the Word of God. It discusses on the themes such as the God who speaks, our response to the God who speaks, and the interpretation of Sacred Scripture in the church. The second part is pastoral in nature where relationship between the Word of God and the church is discussed. Here the two broad areas, namely liturgy and life of the church are discussed in all detail. The final part is about the relationship between the Word of God and the world. This last section is further subdivided into four sections: The Church's Mission: To proclaim the word of God to the world, The Word of God and commitment in the world, the Word of God and culture, finally the Word of God and interreligious dialogue. I earnestly request all the Priests, Religious and Laity to read this theologically rich, pastorally useful and socially meaningful document.

Secondly, I wish to reflect on '***making sense of the Bible.***' Usually when one reads the Bible he/she wants primarily to understand what the author of the text wants to communicate through that piece of writing. In other words, what is the *meaning of the text*. To find this out, we need to know something about the author, text, the background,





socio, politico and cultural context of the author etc. There are lots of books and commentaries that would explain this to us. But the Word of God cannot be contained to seeing the meaning of the text alone. In other words, it is not only the text of the past, giving some details about the past events and personalities. Rather, as Sacred Scripture, it has more relevance to the life of the one who reads it. It consoles, encourages, guides, and at times challenges us. We need to use Bible as one that makes *our life meaningful*. It can personally speak to us. So it is very important that we read the Bible personally, mediate, pray and seek the guidance to our Christian living.

I wish and pray that the Priests, Religious and the Laity read this God's love letter not only as an intellectual and regular exercise but as a revelation of God to us in our times. May the Blessed Lord shower His abundant graces on all of us who are committed to the Biblical Apostolate.

Your brother in Christ

God Bless You



**Rev. Dr. P. Ambrose**
**Vicar General**




## RELIGIOUS PRIESTS APPOINTMENTS - 2011

**ASSISTANTS**

| | |
|---|---|
| Kamarajapuram | Rev Fr S Nelson SSS |

**+ Most Rev Dr A Neethinathan**
**Bishop of Chingleput**

**Rev Fr N Louis Rayar**
**Chancellor**

# NEWS FROM THE PASTORAL CENTRE

## ANNUAL CLERGY RETREAT

### First Batch (Priests Ordained till 2002)

| | |
|---|---|
| **DATE:** | October 09, 2011, Sunday (Supper) to<br>October 14, 2011 Friday Evening |
| **PLACE:** | DMI Retreat House, St. Thomas National Shrine |
| **PREACHER:** | **Rev. Fr. Arockiam SJ** |

— — — — — — — — — — — — — —

### Second Batch (Priests Ordained from 2003)

| | |
|---|---|
| **DATE:** | October 16, 2011, Sunday (Supper) to<br>October 21, 2011 Friday Evening |
| **PLACE:** | DMI Retreat House, St. Thomas National Shrine |
| **PREACHER:** | **Rev. Fr. Jesudoss SDB** |

Please note the dates and make yourself available on all the days totally disposed for the annual retreat.

---

## குருக்களுக்கான தொடர் பயிற்சி

இவ்வாண்டு குருக்களுக்கான தொடர் பயிற்சி **எல்லார்க்கும் மறைக்கல்வி** என்ற கருபொருளை மையமாக கொண்டு ஆகஸ்ட் 9 ம் தேதி முதல் 11 ம் தேதி வரை DMI தியான மையம், தோமையார் மலையில் குருக்களை இரண்டு குழுக்களாக பிரித்து பயிற்சி பாசறை நடைபெற்றது. அருட்தந்தை. செபாஸ்டியன், தமிழக மறைக்கல்வி பணிக்குழு செயலர் (முப்பணி நடுநிலையம், திண்டிவனம்) மற்றும் அருட்பணி. நம்பிக்கை நாதன், இயக்குநர் , மேய்ப்புப்பணி நிலையம், சென்னை ஆகியோர் சிறப்பு கருத்தாளராக வருகைதந்து தொடர் குருத்துவ வாழ்வு பாசறையை வழிநடத்தினார்கள்.





ஆயரின் பிரதிநிதியாக மறைமாவட்ட செயலக செயலர் அருட்பணி. லூயிஸ் ராயர் அவர்கள் தலைமையேற்று குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். ஏறக்குறைய 90 க்கும் மேற்பட்ட குருக்கள் கலந்து கொண்டனர். தொடர் கிறிஸ்துவ விசுவாச வாழ்வு, கிறிஸ்துவுக்குள் வாழ்வு, இதன் நீட்சியான பிறரன்பு வாழ்வு, சாட்சிய வாழ்வு, நற்செய்தியை ஒட்டு மொத்த வாழ்வின் வழியாக எடுத்தியம்பும் வாழ்வு என்பதை இந்த பாசறையிலே அருட்தந்தையின் பகிர்வு வழியாகவும் குழு கலந்தாலோசித்தல் வழியாகவும் தெளிவுப்படுத்தப்பட்டது. நமது ஆயர் அவர்கள் இந்நாட்களில் முழுமையாக பங்குபெற்றது மகிழ்ச்சி அளித்தது.

**அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன்**
**இயக்குநர்**

## பொதுநிலையினருக்கான சிறப்பு கருத்தரங்கு

* ஆகஸ்ட் 14 ம் தேதி செங்கல்பட்டு மறைமாவட்ட மேய்ப்புப்பணி மையத்தில் நடைபெற்ற சிறப்புக் கருத்தரங்கில், தமிழகத்தில் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள இந்திய கிறித்தவ மக்கள் கட்சியின் செங்கல்பட்டு கிளையானது நமது ஆயர் **மேதகு டாக்டர் நீதிநாதன்** அவர்கள் கட்சி கொடியேற்ற, மாநில நிர்வாகிகளின் முன்னிலையில் தொடங்கி வைக்கப்பட்டது.

* ஆயரின் ஆசியுரையில், இந்திய அரசியல் தளத்தில் நமக்கென அடையாளமில்லை, நாம் அதற்கு முயற்சிக்கவுமில்லை, அரசியலில் நமக்கென ஒரு வலுவான பிரதிநித்துவம் இல்லாத காரணத்தால், கிறித்தவர்களின் எல்லா போராட்டத்திற்கும் குரலாக நாம் மாற்றம் பெற, தமது முழுமையான ஆசிரையும், ஆதரவையும் வழங்குவதாக உறுதியளித்தார்.

* அடுத்து கீழே குறிப்பிட்டுள்ள செங்கல்பட்டு கிளை நிர்வாகிகள், மாநில தலைவரால் நியமனம் செய்யப்பட்டனர்.

| | |
|---|---|
| **தலைவர்** | : திரு. அமலநாதன், பெருங்களத்தூர் |
| **துணைத்தலைவர்** | : திரு. அந்தோணிதாஸ், விப்பேடு<br>திரு. ஜோசப் செல்வராஜ், காமராஜபுரம் |

| | |
|---|---|
| **செயலர்** | : திருமதி. பரிமளம்பீட்டர், புனித தோமையார்மலை |
| | : திரு. வனத்தையன், எலப்பாக்கம் |
| **இணைச்செயலர்** | : திரு. ஆரோக்கியதாஸ், செங்காட்டூர் |
| | திரு. திவ்விய நாதன், பாலவாக்கம் |
| | திரு. சேவியர், பாப்பநல்லூர் |
| **பொருளாளர்** | : திரு. இக்னேஷியஸ், ஆலந்தூர் |
| **மக்கள் தொடர்பு அலுவலர்** | : திரு. ரபேல், தர்காஸ்ட் |
| **கொள்கை பரப்பு செயலர்** | : திரு. அந்தோணி மாதவன், ஆலந்தூர் |
| **மகளிர் அணி தலைவர்** | : திருமதி. ராணி வில்சன், சோழிங்கநல்லூர் |
| **மகளிர் அணி துணைத்தலைவர்** | : திருமதி. ஆரோக்கியமேரி, மகாபலிபுரம் |
| **இளைஞர் அணித் தலைவர்** | : திரு. பிரேமானந், கூத்தவாக்கம் |
| **ஆலோசகர்** | : திரு. கோவிந்து ஞானம், புனித தோமையார் மலை |
| **சட்ட ஆலோசகர்** | : திரு. நாதன் (வழக்கறிஞர்), காந்தி நகர் |

* உலகியல் ஈடுபாடு 2 ம் வத்திகான் சங்கம் பொதுநிலையினருக்கு வழங்கிய தனிப்பட்ட அழைப்பாகும். இருந்தும் கிறித்தவர்களாகிய நாம் சமூக அரசியல்தளங்களில் நமது அழைப்பினை உணராமல், நமது செயல்பாடுகளை ஆலயத்திற்குள்ளாகவே முடக்கிக் கொண்டுள்ளோம். இதற்கு மாற்றாக, இந்திய கிறித்தவ மக்கள் கட்சி, தமிழகத்தின் பல்வேறு பொதுநிலையினர் அமைப்புகளில் பொறுப்பாளர்கள் பயிற்சி பெற்று, ஆழ்ந்த அனுபவமும் கொண்ட பொதுநிலையினர் ஒன்று கூடி அனைத்துக் கிறித்தவர்களுக்காகவும், மிக குறிப்பாக ஒடுக்கப்பட்டோருக்கு குரல் கொடுக்கவும், எல்லாருக்காகவும் ஒட்டுமொத்த ஏழை எளிய பாட்டாளி மக்களின் நலன்களுக்காகவும், கிறித்துவின் மதிப்பீடுகளின் அடிப்படையில் தொடங்கப்பட்டுள்ளது.

* இக்கட்சி கடந்த 20.03.2011 அன்று சென்னையில், தமிழக ஆயர் பேரவையின் தலைவரும், சென்னை-மயிலை உயர்மறைமாவட்ட பேராயருமான **மேதகு டாக்டர் A.M. சின்னப்பா** அவர்கள் ஆசியுடன் தொடங்கப்பட்டது. இக்கட்சியானது திரு. ஆட்சியாளர்களின் ஆசீரோடு திருச்சபைக்கு வெளியே செயல்படுகின்ற அரசியல் கட்சியாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.





- சட்டமன்ற உள்ளாட்சி தேர்தல்களில் நேரிடையாகப் போட்டியிடுவது.
- கிறித்தவர்களின் உரிமைகளைப் பெற்றுத்தர பாடுபடுவது.
- தலித் விடுதலைக்காக பாடுபடுவது.
- திருச்சபையின் சொத்துக்களைப் பாதுகாக்கப் பாடுபடுவது போன்ற 18 இலக்குகளோடு அரசியல் களமிறங்கி இருப்பதை பாராட்டுகிறோம். நமது பாசமிகு ஆயர் **மேதகு டாக்டர் நீதிநாதன்** அவர்கள் தனது உரையில் கூறியது போல, நமக்கு ஓர் அரசியல் அடையாளம் கிடைக்க வேண்டுமாயின், இக்கட்சியினை வளர்க்க செய்வது நமது கடமையாகிறது. எனவே, நமது செங்கல்பட்டு கிளையின் நிர்வாகிகளாகிய நாங்கள் உங்கள் உதவியை நாடி வரும்போது எங்களுக்கு தங்களின் மேலான ஒத்துழைப்பை தந்து எங்களை ஊக்குவிக்க அன்புடன் வேண்டுகின்றோம்.

**பரிமளம் பீட்டர்**
**செயலர்**

## அன்பியம்

* ஜீலை 31 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 2.00 மணி முதல் திருப்பெரும்புதூர், அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் பங்குபேரவை உறுப்பினர்களுக்கு பயிற்சியும், பணிகளை தெளிவுபடுத்தி ஊக்குவித்தலும் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்பணி. எட்வின் லாரன்ஸ் அவர்கள் தலைமையில் 16 பேர் பங்குகொண்டனர்.

* ஆகஸ்ட் 7 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை சோகண்டி புனித குழந்தை தெரேசா ஆலயத்தில் திருப்பலியுடன் அன்பியத்தை பற்றி அறிமுகம் செய்து அதன் முக்கியத்துவத்தை பற்றியும், இந்த காலகட்டத்தில் அன்பியத்தின் அவசியம் குறித்தும் விரிவாக எடுத்துரைக்குப்பட்டது. இதில் பங்கு மக்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

* ஆகஸ்ட் 16 ம் தேதி முதல் 25 ம் தேதி வரை இராமாபுரம், கிறிஸ்துஜோதி ஆலயத்தில் 18 அன்பியங்கள் சந்திக்கப்பட்டு, அன்பியங்களுக்கான தலைவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். பின்னர் அன்பியம் பற்றிய பயிற்சியும் அளிக்கப்பட்டது. மக்கள் உற்சாகமுடன் அனைத்து ஒத்துழைப்பையும் ஆதரவையும் நல்கினர்.

✱ இப்பயிற்சியை வழிநடத்தியவர்கள்: வேதியர்கள் பிரான்சிஸ், அருள்தாஸ், திரு. ஜோசப் செல்வராஜ், திரு. அமலதாஸ், திரு. ரபேல், திரு. ராஜன்பால்.

✱ அகில உலக அளவில், நாக்பூரில் நடைபெற்ற அன்பிய இறையியல் கருத்தரங்கானது ஆகஸ்ட் மாதம் 17 ம் தேதி முதல் 19 ம் தேதி வரை நடைபெற்றது. அக்கருத்தரங்களில் நமது மறைமாவட்ட அன்பிய செயலர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன் அவர்கள் கலந்துகொண்டார்.

✱ ஆகஸ்ட் 21 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மணப்பாக்கம் பங்கில் அன்பிய ஆண்டு விழா நடைபெற்றது. மறைமாவட்ட அன்பிய செயலர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன் அவர்கள் கலை நிகழ்ச்சிகளிலும் அதன்பின் நடைபெற்ற திருப்பலியிலும் கலந்துகொண்டு மக்களை வாழ்த்தினார்.

**அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன்**
**செயலர்**

## மறைக்கல்வி பணிக்குழு

✱ ஆகஸ்ட் 7 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை தச்சூர், தூய ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் மறைக்கல்வி ஆண்டை முன்னிட்டு **எல்லார்க்கும் மறைக்கல்வி** என்ற தலைப்பில் பெரியவர்களுக்கு குடும்ப மறைக்கல்வி பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் 60 க்கும் மேற்பட்டோர் கலந்துக்கொண்டனர்.

✱ ஆகஸ்ட் 7 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தாம்பரம், புனித பாத்திமா அன்னை ஆலயத்தில் மறைக்கல்வி மாணவ மாணவியருக்கு விளையாட்டுக்கள், பாடல்கள் மூலம் **எல்லார்க்கும் மறைக்கல்வி** பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டது.

✱ இவற்றை வழிநடத்தியவர்கள்: அருட்சகோதரர் தாமஸ் ஜெரோம், வேதியர்கள் பிரான்சிஸ் சேவியர், அருள்தாஸ்.

### துறவறத்தாருக்கான ஒரு நாள் கருத்தரங்கு

**நாள்:** 17.09.2011 **இடம்:** மேய்ப்புப்பணி மையம்

**தலைப்பு:** எல்லார்க்கும் மறைக்கல்வி

**பங்கேற்பாளர்கள்:** மறைமாவட்டத்தில் பணிபுரிகின்ற துறவறத்தார்





### வேதியர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி பாசறை

**நாள்:** 22.09.2011 முதல் 23.09.2011 வரை

**இடம்:** மேய்ப்புப்பணி மையம்

**பங்கேற்பாளர்கள்:** மறைமாவட்டதில் பணிபுரிக்கின்ற பயிற்சி பெற்ற, பெறாத வேதியர்கள், கோயில்பிள்ளையர்கள், சாக்ரிஸ்தியன்கள்

## Annual Retreat for Teachers

Annual Retreat for all the teachers working in the diocesan schools as well as in the religious schools is scheduled as follows:

| S.No | Date/Time | Place |
|---|---|---|
| 01 | 22.10.11 /09.30 am - 04.00 pm | St. Antony's Church, Madurantagam (Tamil) |
| 02 | 22.10.11 /09.30 am - 04.00 pm | St. Sebastian Matriculation School, Pallavaram (Tamil) |
| 03 | 12.11.11 /09.30 am - 04.00 pm | St. Patrick's Church, St. Thomas Mount (English) |
| 04 | 12.11.11 /09.30 am - 04.00 pm | Our Lady of Fatima Church's Hall, Tambaram (Tamil) |
| 05 | 19.11.11 /09.30 am - 04.00 pm | Pastoral Centre, Chingleput (Tamil) |
| 06 | 19.11.11 /09.30 am - 04.00 pm | Our Lady of Immaculate Heart of Mary Church, Kancheepuram (Tamil) |
| 07 | 26.11.11 /09.30 am - 04.00 pm | Seashore St. Antony's Church, Palavakkam(Tamil) |

***Lunch will be provided***

***We request the correspondents and the HM's to do the needful***

**அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன்**
**செயலர்**

## பொதுநிலையினர் பணிக்குழு

* "**ஒன்று சேர்வோம் - புதுப்பித்துக்கொள்வோம்**" என்ற மையக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு, பொதுநிலையினருக்கான ஒரு நாள் சிறப்பு கருத்தரங்கு ஆகஸ்ட் 14 ம் தேதி ஞாயிறன்று காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நமது மேய்ப்புப்பணி மைய அரங்கில் நடைபெற்றது. 27 பங்குகளை சார்ந்த 160 பங்கு பேரவை துணைத்தலைவர்கள், செயலர்கள், அன்பிய ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர், செயலாளர் மற்றும் மேய்ப்புப்பணி பேரவையின் இருபால் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.
* "**இறைமக்கள் பேரவையும் அதில் பொதுநிலையினரின் பங்களிப்பும்**" குறித்து நமது மறைமாவட்ட வேந்தர் தந்தை அருட்பணி. லூயிஸ் ராயர் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். அதனைத் தொடர்ந்து "இந்திய கிறிஸ்துவ மக்கள் கட்சியின்" செங்கல்பட்டு கிளையானது நமது பாசமிகு ஆயர் அவர்கள் தலைமையில் துவங்கப்பட்டது. கட்சியின் மாநில நிர்வாகிகள் ஆறுபேர் விழாவில் கலந்து கொண்டனர். ஆயர் அவர்கள் கட்சியின் கொடியேற்ற, நிர்வாகிகள் மரக்கன்றுகளை ஆயர் அவர்களுடன் இணைந்து மேய்ப்புப்பணி மையத்தில் நட விழா ஆடம்பரமாக துவக்கியது. செங்கல்பட்டு கிளையின் நிர்வாகிகள் மாநிலத் தலைவரால் நியமனம் செய்யப்பட்டனர். புதிய உறுப்பினர்கள் ஆயர் அவர்கள் முன்னிலையில் சேர்க்கப்பட்டனர். இதனை தொடரந்து, ஆயர் அவர்கள் ஆசியுரை வழங்க கட்சி துவக்க விழா இனிதே நிறைவுற்றது.
* மதிய உணவு இடைவேளைக்குப்பிறகு கிறிஸ்துவ மறுமலர்ச்சி இயக்க கிளைத்தலைவர் திரு. திவ்ய நாதன் அவர்கள் "**நமது மறைமாவட்டத்திலுள்ள இதர பொது நிலையினர் அமைப்புகளும் அதன் வரலாற்றுப் பின்னணியும்**" எனற தலைப்பில் உரை நிகழ்த்தினர்.
* அதனைத்தொடர்ந்து மேய்ப்புப்பணி மைய இயக்குநர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன் அவர்கள் "**மறைக்கல்வி ஆண்டின் சிறப்பும் அதற்காக திட்டமிடப்பட்டுள்ள பல்வேறு பயிற்சிகளும்**" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றி பங்கேற்பாளர்கள் ஒரு கலந்தாய்வை மேற்கொள்ள வழி வகுத்தார். மாலை திருப்பலியுடன் கருத்தரங்கு நிறைவுற்றது.

**திரு. இக்னேஷியஸ்**
**செயலர்**





## பெண்கள் பணிக்குழு

தமிழக ஆயர் பேரவையின் பெண்கள் பணிக்குழுவின் சென்னை மண்டலப்பயிற்சியானது செங்கை மேய்ப்புப்பணி மையத்தில் இரண்டு நாள் கருத்தமர்வுடன் நடைபெற்றது. மேய்ப்புபணி மைய இயக்குநர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன் அவர்களால் இப்பயிற்சி துவங்கிவைக்கப்பட்டது. இப்பயிற்சியின் கருத்தாளராக "பெண்ணிய பார்வையில்" என்ற தலைப்பில் விவிலிய விளக்கமானது விவிலிய பணிக்குழு செயலர் அருட்பணி. லூக்காஸ் ராஜ் அவர்களால் அளிக்கப்பட்டது. "திருச்சபை சட்டத்திலும் போதனையிலும் பெண்கள்" என்ற தலைப்பில் பொழிச்சலூர் பங்குத்தந்தை மற்றும் மறைமாவட்ட தலைமை நீதிபதி அருட்பணி. ஜான் போஸ்கோ அவர்கள் விளக்கம் அளித்தார். அதன் பிறகு தூத்துக்குடி மறைமாவட்டத்தை சார்ந்த திருமதி. ஜோஸ்பின் அவர்கள் பாலின நிகர்நிலை மற்றும் திருச்சபையிலும் சமுதாயத்திலும் பெண்களின் நிலை என்ற தலைப்பில் விளக்கம் அளித்தார். இம்மண்டல பயிற்சியில் மாநில பெண்கள் பணிக்குழு செயலர் திருமதி. மரிய ஜோஸ்பின் லில்லி மற்றும் மாநில பெண்கள் பணிக்குழு துணைச்செயலர் அருட்சகோதரி மரி ஜரின் கலந்துகொண்டனர். சென்னை, செங்கல்பட்டு மற்றும் வேலூர் மறைமாவட்டங்களிலிருந்து பெண்கள் கலந்துகொண்டனர்.

### *பெண்குழந்தைகள் தினம்*
**(மறைமாவட்ட அளவில்)**

**நாள்:** 11.09.2011, ஞாயிற்றுக்கிழமை

**நேரம்:** காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை

**இடம்:** மேய்ப்புப்பணி மையம்

இக்கொண்டாட்டத்தில் கருத்தமர்வு, கட்டுரைப்போட்டி, வினாடிவினா, நாடகப்போட்டி என பல போட்டிகள் நடைபெற உள்ளது. இதில் தங்கள் பங்கில் இருந்து 6 வது முதல் 15 வயது வரை உள்ள பெண்குழந்தைகளை பங்கேற்கச் செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**திருமதி. லில்லி மேரி**
**செயலர்**

## இளைஞர் பணியகம்

### பங்களவில்

* ஆகஸ்ட் 4 ம் தேதி மாலை 6.00 மணியளவில் பள்ளிக்கரணை, குழந்தை இயேசு ஆலயத்தில் இளைஞர் ஆண்டு நிறைவு விழா மறைமாவட்ட இளைஞர் பணிக்கு செயலர் அருட்பணி. K.C. அமலோற்பவ ராஜ் அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.
* ஆகஸ்ட் 14 ம் தேதி காலை 10.00 மணியளவில் செங்கல்பட்டு புனித சூசையப்பர் பேராலய இளைஞர்களால் வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட்டது.
* ஆகஸ்ட் 14 ம் தேதி மாலை 5.00 மணியளவில் கூடுவாஞ்சேரி, நல்லாயன் ஆலயத்தில் இளைஞர் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.
* ஆகஸ்ட் 15 ம் தேதி காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை ரெட்டிபாளையம், புனித அந்தோணியார் ஆலய இளைஞர்களுக்கு ஒருநாள் கருத்தரங்கு மறைமாவட்ட இளைஞர் பணிக்குழு செயலர் அருட்பணி. K.C. அமலோற்பவ ராஜ் அவர்களால் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் 75 இளைஞர்கள் பங்குபெற்றனர்.

### மறைமாவட்ட அளவில்

* ஆகஸ்ட் 7 ம் தேதி மறைமாவட்ட அளவில் இளைஞர் ஞாயிறு பல பங்குகளில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.
* இளைஞர் இளம்பெண்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நமது மறைமாவட்ட மேய்ப்புப்பணி மையத்தில் ஆகஸ்ட் 13 ம் தேதி காலை 10.00 மணி முதல் ஆகஸ்ட் 14 ம் தேதி மாலை 4.00 மணி வரை நடைபெற்றது. இதில் 32 இளைஞர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

### மாநில அளவில்

* இளைஞர் இயக்க பொதுக்குழு கூட்டம் திருச்சி கருமண்டபத்தில் உள்ள இளையதீபத்தில் ஜீலை 23 ம் தேதி மாலை 6.00 மணி முதல் ஜீலை 24 ம் தேதி பிற்பகல் 1.00 மணி வரை நடைபெற்றது.





* ஜீலை 25 ம் தேதி மறைமாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கான மனித உரிமை முதல் காலண்டு திறனாய்வு கூட்டம் திருச்சி கருமண்டபத்தில் உள்ள இளையதீபத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை நடைபெற்றது.
* ஜீலை 28 ம் தேதி மாலை 6.00 மணி முதல் 31 ம் தேதி பிற்பகல் 1.00 மணி வரை கருத்தாளர் உருவாக்க பயிற்சியானது திருச்சி கருமண்டபத்தில் உள்ள இளையதீபத்தில் நடைபெற்றது. இதில் நமது மறைமாவட்ட ஒருங்கிணைப்பாளர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றார்.

### பங்கு சந்திப்புகள்

| தேதி | பங்கு |
|---|---|
| 31.07.2011 | புனித சூசையப்பர் பேராலயம், செங்கல்பட்டு |
| 04.08.2011 | புனித குழந்தை இயேசு ஆலயம், பள்ளிக்கரணை |
| 07.08.2011 | திருக்குடும்ப ஆலயம், முடிச்சூர் |
| 14.08.2011 | ஆரோக்கிய அன்னை ஆலயம், தச்சூர் |
| 14.08.2011 | விண்ணரசி அன்னை ஆலயம், மறைமலை நகர் |
| 15.08.2011 | புனித அந்தோணியார் ஆலயம், ரெட்டிபாளையம் |

**இளைஞர்களுக்கான மாபெரும் தியானம்**
**(மறைமாவட்ட அளவில் )**

**நாள்:** 04.09.2011 (செப்டம்பர் 04)

**இடம்:** மழைமலை மாதா அருட்தலம், அச்சிறுப்பாக்கம்

**நேரம்:** காலை 10.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை

அனைத்து இளைஞர்களையும் அனுப்பி வைத்து ஊக்குவிக்குமாறு பங்குத்தந்தையர்களை கேட்டுக்கொள்கிறோம்.

## இளம் கிறித்தவ மாணாக்கர்/ இளம் மாணாக்கர் இயக்கம்

### மாநில அளவில்

* இளம் கிறித்தவ மாணாக்கர் /இளம் மாணாக்கர் இயக்க பொதுக்குழு கூட்டம் திருச்சி கருமண்டபத்தில் உள்ள இளையதீபத்தில் ஜீலை 22 ம்

தேதி மாலை 6.00 மணி முதல் 23 ம் தேதி பிற்பகல் 1.00 மணி வரை நடைபெற்றது. இப்பொதுக்குழு கூட்டத்தில் நமது மறைமாவட்ட செய்யூர் சிறுமலர் மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த மாணவி ஜோன்ஸ் சினேகா மாநிலத் தலைவியாகத் தேர்வு செய்யப்பட்டார் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

## பள்ளி சந்திப்புகள்

| தேதி | பள்ளி | ப.கொ. எ |
|---|---|---|
| 05.08.2011 | புனித பத்தாம் பத்திநாதர் மேல்நிலைப் பள்ளி, பெருங்குடி | 167 |
| 05.08.2011 | புனித சூசையப்பர் மேல்நிலைப்பள்ளி, கிழக்கு தாம்பரம் | 153 |
| 05.08.2011 | புனித மரியன்னை மெட்ரிக்குலேஷன் பள்ளி, கூடுவாஞ்சேரி | 46 |

### *"திறமைக்கு ஒரு சவால்"*
**மாணவர்களுக்கான வினா-விடை போட்டி**

**முதல் கட்டத்தேர்வு:**
பள்ளி அளவில்
செப்டம்பர் 7 ம் தேதிக்குள்

**இரண்டாம் கட்டத்தேர்வு:**
மறைமாவட்ட அளவில்
செப்டம்பர் 17 ம் தேதி

**இடம்:** இளைஞர் பணியகம், மேய்ப்புப்பணி மையம், திம்மாவரம்
**நேரம்:** காலை 11.00 மணி

**அருட்பணி. K.C. அமலோற்பவ ராஜ்**
**செயலர்**

## தொழிலாளர் பணியகம்

* இளையோர் ஆண்டை முன்னிட்டு 25 இளையோர் கிறித்தவ தொழிலாளர் இயக்கத்தில் இணைந்தனர். இவர்களுக்கான கருத்தரங்கு ஜீலை 10 ம் தேதி செங்கல்பட்டு, பேராலயத்தில் காலை 10.00 மணியளவில் நடைபெற்றது. இதில் இளங்கிறித்தவ தொழிலாளர் ஆன்மீகம் பற்றி ஆலோசிக்கப்பட்டது.





* ஜீலை 23 ம் தேதி மற்றும் 24 ம் தேதி கிறித்தவ தொழிலாளர் இயக்கத்தின் தேசிய அளவிலான பொதுக்குழு கூட்டம் சென்னை, தியான ஆசிரமத்தில் 2 நாள் நடைபெற்றது. இதன் முத்தாய்ப்பாய் தேசிய இயக்க உறுப்பினர்கள் மாமல்லபுரம் பங்கில், பங்குத்தந்தை அருட்பணி. சார்லஸ் அவர்கள் ஏற்பாடு செய்திருந்த நமது ஆயர் தலைமையிலான திருப்பலி மற்றும் விருந்தில் கலந்து கொண்டனர்.

**அருட்பணி. ஆரோக்கிய ரேமண்ட்**
**செயலர்**

## தலித் பணியகம்

* தலித் கிறித்தவர்களை SC பட்டியலில் சேர்க்க கோரி தில்லியில் ஜீலை 25 ம் தேதி முதல் 31 ம் தேதி வரை நடைபெற்றது. 27 ம் தேதி நடைபெற்ற பட்டினி அறப்போரட்டத்தில் நமது மறைமாவட்டத்திலிருந்து 10 குருக்களும், 40 பொதுநிலையினரும்






ஆயர் தலைமையில் கலந்து கொண்டனர். ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி. தொடர்ந்து இப்போராட்டம் வெற்றி பெற நமது பங்கில் வழங்கப்பட்ட **"அரசியல் சம உரிமை கோரும் செபத்தினை"** அன்றாடம் மன்றாடுவோம்.

* தலித் கிறித்தவர்களை SC பட்டியலில் சேர்க்க கோரி "கறுப்பு நாள் - ஆகஸ்ட் 10" நிகழ்வுகள் செங்கல்பட்டு, பழைய பேருந்து நிறுத்தத்தில் ஆர்பாட்டம், சாலை மறியல், பேரணி ஆகியவை நமது ஆயர் தலைமையில் நடைபெற்றது. இதில் 200 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



* ஆகஸ்ட் 17 ம் தேதி "கலாச்சாரத் துறையில் கலை" களுக்கான திட்டங்களை குறித்து கலந்தாலோசனை மனித செயல்பாட்டு இயக்க அலுவலகம், உத்திரமேரூரில் நடைபெற்றது.

* ஆகஸ்ட் 27 ம் தேதி மற்றும் 28 ம் தேதிகளில் 2011 - 12 ம் ஆண்டிற்கான மாணவர் திறன் வளர் பயிற்சி முகாம் - 1 நடைபெற்றது. அதில் மாணவர்களுக்கு மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழுவினால் தச்சூரில் நடத்தப்பட்ட மருத்துவ முகாமில் கலந்து கொள்ளும் வாய்ப்பு அளிக்கப்பட்டது.

**அருட்பணி. ஆரோக்கிய ரேமண்ட்**
**செயலர்**

## நற்செய்தி அறிவிப்பு பணியகம்

* ஜீலை 10 ம் தேதி இவ்வாண்டிற்கான முதல் கூட்டம் செங்கல்பட்டு புனித சூசையப்பர் பேராலயத்தில் மாலை 5.00 மணியளவில் நடைபெற்றது. இதில் புதிய ஆண்டிற்கான திட்டமிடல்கள், வெல்வெளிகளை பற்றி ஆலோசிக்கப்பட்டது.



* ஆகஸ்ட் 15 ம் தேதி இரண்டாவது கூட்டம் செங்கல்பட்டு பேராலயத்தில் மாலை 5.00 மணியளவில் நடைபெற்றது. புத்தக தயாரிப்பு, வெளியீடுகள், ஆன்மீக மையயம், கருத்தமர்வுகள், கண்ணகி நகர் மறைப்பணி, உள் விடுதி மற்றும் பள்ளிகளில் தியானம் போன்றவை ஆலோசிக்கப்பட்டன.

**அருட்பணி. ஆரோக்கிய ரேமண்ட்**
**செயலர்**

## மாலைக்கல்வி பணியகம்

ஜீலை மாதம் 23 ம் தேதி சனிக்கிழமை மாலைக்கல்வி ஆசிரிய பெருமக்களுக்கான அறிமுகக்கூட்டமும், ஆண்டு கலந்தாய்வு திட்ட விளக்க கூட்டமும் நமது மறைமாவட்ட மேய்ப்புப்பணி மையத்தில்





நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஐம்பது ஆசிரியர்கள் கலந்துக் கொண்டார்கள். இக்கூட்டத்தில் நடைபெற்ற இரண்டு அமர்வுகளிலும் நமது மறைமாவட்டத்தின் கல்விக்கொள்கை, நமது ஆயரின் அடிப்படைகல்வி குறித்த நிலைப்பாடு, அரசாங்கத்தின் கல்வி குறித்த அவல நிலை, தற்போதைய கல்விக் கொள்கையால் சீரழியும் கிராமப்புற ஏழை மாணவ மாணவியரின் வாழ்க்கை சமூக முன்னேற்றத்திற்கு கல்வியின் அவசியம், மாலைக்கல்வி நிலையங்களில் நாம் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள், ஏழை மாணவ மாணவியருக்கு கல்வி கற்பித்தல் வழிமுறைகள், முற்சாய்ப்பு எண்ணங்களை அகற்றி முற்போக்கு சிந்தனைகளை வளர்த்தல் போன்ற தலைப்புகளில் கருத்தமர்வு நடைபெற்றது. இக்கருத்தமர்வு மாலைக்கல்வி ஆசிரிய பெருமக்களுக்கு ஒரு உந்து சக்தியாக அமைந்தது. இறுதியில் சிறு கலை நிகழ்ச்சியோடும், கல்வி விழிப்புணர்வு பாடல்களோடும் பிற்பகல் 1.30 மணிக்கு இக்கருத்தமர்வு நிறைவுபெற்றது.

**அருட்பணி. அந்தோணிராஜ்**
**செயலர்**

## BIRTHDAYS

| | |
|---|---|
| Fr. Arockiaraj A. | 04.09.1976 |
| Fr. Lucas R. | 05.09.1975 |
| Fr. Esthakiyus P. | 10.09.1970 |
| Fr. Roch Ignatius K. | 10.09.1975 |
| Fr. Vincent Chinnadurai A. | 16.09.1953 |
| Fr. Leo Edwin R. | 18.09.1980 |
| Fr . Charles N. | 23.09.1963 |
| Fr. Benjamin Nesamani | 23.09.1975 |
| Fr. Arockiya Raymond | 25.09.1979 |
| Fr. Christuraj G. | 26.09.1969 |
| Fr. Michael Alexander | 30.09.1977 |

## HOLY FATHER'S PRAYER INTENTIONS FOR SEPTEMBER 2011

**GENERAL:** For all teachers, that they may convey love in truth and educate in authentic moral and spiritual values.

**MISSION:** That Christian communities spread throughout the Asian continent may proclaim the Gospel with fervor, bearing witness to beauty with the joy of the faith.